தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உக — திருவள்ளுவர் யாண்டு கஎஅச — விசய—வைகாசி — 1953—மே — மலர் உ

பொழிற்றொண்டர் கருத்துரைகள்.

துயரம்.

வீரத் திரு. சண்முகம் செட்டியார் அவர்கள் மறைவு.

அணித்தில் அடுத் தடுத்து நம் சங்க அன்பர்களாகிய தமிழ்ப் பெருமக்கள் பலரை இழக்க நேர்ந்தது பெருங் குறையே. 1953-மே-5-ஆம் நாள் மாலை 6 மணிக்கு ரபே ரிஞர் வீரத்திரு. R. K. சண்முகம் செட்டியார் அவர்கள் கோயமுத்தூரில் தம் இல்லத்தில் ஈன்ற தாய் முதலான உற்றார் உறவினர், நண்பரும் ஏனைய தமிழ் மக்களும் பெருந் துயர் உற்று ஏங்க மண் ணுலக வாழ்வு துறந்தார்கள். நம் சங்கப் பேரன்பராகிய இவர்கள் மறைவு உலகத்திற்கு சிறப்பாக தமிழ் நாட்டிற்கு, மாற்றொணுப் பேரிழப்பாகும்.

திரு. செட்டியாரவர்கள் உலகப் புகழ்பெற்ற பெரி யார். கல்வித் துறையிலும், பொருளாதாரத் துறையிலும், ஆட்சித் துறையிலும், மாட்சித் துறையிலும், வாணிபத் துறையிலும் ஏனையத் துறைகளிலும் பேர்பெற்று விளங் கியவர்கள். தமிழ்த் தாயிடத்துப் பெரிதும் ஈடுபாடுடை யவர்கள். தமிழிலக்கியங்களை கசடறக்கற்றுச் சுவைத்துச் சுவைத்து மகிழ்ந்தவர்கள். சிலப்பதிகார நூலிடத்து, தனிப் பாராட்டுடையவர்கள். எண்ணியது முடிக்கும் திண் ணிய உளத்தினர். இத்தகைய பெரியார் மறைவு தமி ழுலகிற்கே பெருந்துயர் விளைப்பதாகும்.

நம் சங்கத்து முன்னுள் உறுப்பினர்களாகிய தமிழ வேள் அன்பர் வழக்குரைஞர் திரு. V. அழகர்சாமி நாயுடு அவர்கள் மறைவும், T. V. இரத்தினசாமி பிள்ளையவர்கள் மறைவும் அறிந்து வருந்துகின்றோம்.

மதிப்புரை.

தெரியற் செய்கை நூல் — இரண்டாம் அடங்கல்— திரு. த. பு. நவநீதகிருட்டினன், M. A., அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு—ரூ. 10.

அன்பர் திரு. த. பு. நவநீதகிருட்டினன் எழுதிய தெரியற் செய்கை நூல் முதலாவது அடங்கலைக் குறித்து சற்று விரிவாகத் தமிழ்ப் பொழிலில் ஆராய்ந்திருந்தோம். எடுத்துக்கொண்ட பொருளைத் திறம்படவும், விளக்கமாக வும் எழுதும் அன்பரது சிறப்பினைப் பாராட்டியுமிருந் தோம். நம் பாராட்டு பின்னும் மிகுதியாக அவர்களுக்கு உரியதுஎன்பதை இவ்விரண்டாம் அடங்கல் பெரிதும் புலப்படுத்துகின்றது.

கலைச் சொற்களைத் தகுதியாக ஆக்கும் பேராற்றல் நிரம்பியவர்கள் நம் அன்பர் ஆவர். நூலில் விளக்கப் பெற்ற பொருள்கள் மாணவர்க்கும் ஏனையர்க்கும் பெரும் பயன் விளைப்பனவாம். கலைச்சொற்களை கருத்துடன் அறிந்து கொள்பவர்க்கு நூலைப்பயிலுதல் மிக எளிதாம். இத்தகைய நூல்கள் பல திரு. நவநீதகிருட்டின ஆசிரிய ரால் வெளிவரவேண்டுமென்பது எம் அவாவாகும்.

திருக்கேதார யாத்திரை— வி. கலியாணசுந்தரம்—ரூ. 1.

திரு. ஆசிரியரவர்கள் திருக்கேதாரத்திற்குச் சென்ற ஒரு வழியின் குறிப்புக்களை ஏனையர்க்கு வழிகாட்டியாக விளக்கமான முறையில் அழகாக எழுதி யிருக்கிருர்கள்.

பிற்காலச் சோழர் சரித்திரம்— பகுதி 1, 2— திரு. T. V. சதாசிவப் பண்டாரத்தார்— அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு.

திரு. சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள் தமிழ் ஆராய்ச்சித் துறையில்-சிறப்பாகக் கல்வெட்டு ஆராய்ச்சித் துறையில்—பெரிதும் பழகியவர்கள் என்பது தமிழுலகம் அறிந்தது. அவர்கள் எழுதியுள்ள இச்சிறந்த நூல்கள் உயரிய ஆராய்ச்சி முறையில் எழுதப்பெற்றுப் பல சிறந்த குறிப்புக்களும் முடிபுகளும் கொண்டுள்ளன. சரித்திரக் குறிப்புக்கள் என்பன மாணவ உலகிற்கும், ஆராய்ச்சிப் புலவர் உலகிற்கும் மிக்க பயன் தந்து மகிழ்வூட்டுவன வாகும். இத்தகைய குறிப்புக்கள் பண்டைச் சங்கநூற்களி னின்றும் மிக நுட்பமாகக் கண்டு குறிக்கப்படுவன. இத் தகைய ஆராய்ச்சிவல்ல புலவர்களில் ஒருவர் நம் பண்டா ரத்தார் ஆவர். இவர்கள் இத்தகைய ஆராய்ச்சி நூல்கள் பலவும் எழுதித் தமிழ் உலகிற்குப் பேருதவி புரிந்து பேரறமும் பெரும்புகழும் எய்துவார்களாக.

உலக வரலாறு— இரண்டாம் பாகம்—திரு. த. இராமநாத பிள்ளை, B. A., யாழ்ப்பாணம். ரூ. 3.

திரு. இராமநாத பிள்ளை அவர்கள், எழுதியுள்ள உலக வரலாற்று நூல் சிறந்த கருத்துக்களும், உயர்ந்த கொள்கைகளும் வியக்கத் தக்க முடிபுகளும் கொண்டுள்ளது.

இந் நூல், பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும், நூல் நிலையங்களிலும் வைத்துப் பயன்படுத்தக் கூடிய அரிய நூலாகும்.

★ **யாழ் நூல்.** ★

பேராசிரியர் விபுலானந்த அடிகளார் பதினான்காண்டு ஆராய்ந்து எழுதிய அரிய, சிறந்த இசை நூல்.

பொருள் பொதிந்தது தோற்றம் பொலிந்தது. விலை மலிந்தது.

மெல்லிய தாள்	தாள் உறை	15—0—0
	துணி உறை	18—0—0
தடித்த தாள்	தாள் உறை	18—0—0
	துணி உறை	20—0—0

அஞ்சல் செலவு வேறு.

—o—

பாண்டியன் நெடுஞ்செழியன்.

(தென்னுப்பிரிகா டர்பன் திரு. ச. மு. பிள்ளை அவர்கள்.)

சோணாட்டதும் காவிரியின் றென்பாலுள்ளதும் பாடல் பெற்றதுமான, தலையாலங்கானமென்னு நகரை யுடைய இவன், மிக்க இளமைப் பருவத்திலேயே மகா பெரிய போரைச் செய்யும் வீரமுடைய நயினான். "சதங்கைவாங்கிய காலில் வீரக் கழலணிந்து, குறிய வளைகளை நீக்கிய கையில் வில்லைப் பிடித்து, தேரினின் றவன்; ஐம்படைத்தாலிகழித்து மிலன்; பாலையொழித்து உணவும் இன்றுண்டான்" என்று இடைக் குன்றூர்கிழார் கூறு மாற்ரு லிவ னிளமை விளங்கும்.

"உடன்றுமேல் வந்த வம்ப மன்னரை
வியந்தன்று மிழிந்தன்று மிலனே யவரை
யழுந்தப் பற்றி யகல்வீசும் பார்ப் பெழக்
கவிழ்ந்து நிலஞ் சேர வட்டதை
மகிழ்ந்தன்று மலிந்தன்று மதனினு மிலனே"

(புறம்—எஎ.)

என்ற அடிகள் நெடுஞ்செழியனது வீரமிகுதியையும், ஆழமுடைமையையும் தெரிக்குமினிமை மிகப்பாராட்டற் பாலதாயிருக்கிறது. இவன் செய்யுள் செய்தலில் வல்லவ னுதலால், தான் கூறிய

"ஓங்கிய சிறப்பி னுயர்ந்த் கேள்வி
மாங்குடி மருதன் றலைவனுக
வுலகமொடு நிலை இய பலர்புகழ் சிறப்பிற்
புலவர்பா டாதுவரைகவென் னிலவரை" (புறம்—எ௨.)

என்ற அடிகளை யுற்று நோக்கி யாராயுமிடத்து, இவன் அவைக்களத்துப் புலவர்களுள் மாங்குடி மருதனுர் தலை வரென்பதும், இவன், அவர் பாடலில் மிக்க விருப்புடை

யனென்பதும், இது பற்றியே இவன்மீது மதுரைக் காஞ்சி யியற்றினரென்பதும், ஊகித்தறியற் பாலனவாய்க் கிடந்தன. எனவே மாங்குடி மருதனாரியற்றிய மதுரைக் காஞ்சிக்குத் தலைவனிவ னென்பது பெறுதும்

இவன், கோச்சேரமான்யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறையோடு பொருது, அவனைத் தன் சிறை யின்கண் அகப்படுத்தினன். இதனைப் புறப்பாட்டுப் பதினேழாஞ் செய்யுள் நன்கு விளக்கும்.

"எழுவர் நல்வலங் கடந்தோய்" (புறம்-கக.)
"கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழியன்
ஆலங் கானத் தகன்றலை சிவப்பச்
சேரன் செம்பியன் சினங்கெழு திதியன்
போர் வேல் யானைப் பொலம்பூ ணெழினி
நாரரி நறவி னெருமை யூரன்
றேங்கம ழகலத்துப் புலர்ந்த சாந்தி
னிருங்கோ வேண்மா னியறேர்ப் பொருநனென்
றெழுவர் நல்வல மடங்க வொருபகன்
முரசொடு வெண்குடை யகப்படுத்து" (அகம்-கஉஅ.)

என்ற பாகத்தாலும்

"அரசுபட வமருழக்கி, முரசு கொண்டு
களம் வேட்ட, விடுதிறலுயர்புகழ் வேந்தே"
(மதுரைக் காஞ்சி; கஉஅ-கஙம.)

என்ற அடிகளின் நச்சினார்க்கினிய ருரையானும், இச் செழியன், தனக்குப் பகைவரா மிரு பெரு வேந்தரு மைம் பெருவேளிருமாகிய, சேரன், செம்பியன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் என்ற எழுவரையும், பொருதுவென்றானென்பது தெரிய வருகிறது. இதனாற்றான், தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் எனப் பெயர் பெற்றான். அவ் வெழுவர் சேனையைத் தன்னிடத்துடைத் தாதலால்

"தமிழ்தலை மயங்கிய தலையாலங்கானம்" (புறம்-கக.) என்றார் குடபுலவியனார்.

இவன், அவ்வெழுவரோடு பொருக காலத்து ஆலங் கானத்தில், போர் வீரர் ஒலி மிகவுண்டான மையின், அகத்தும் புறத்தும், புலவர்கள்,

"ஆலங் கானத் தகன்றலை சிவப்ப
வெற்றி கொள் வீர ரார்ப்பினும் பெரிதே"

என்றும்,

"அகல் விசும் பார்ப்பெழ"

என்றும் புகழ்ந்தார்கள்.

வேள் எவ்வியது, மிழலை யென்னும் பெயரையுடைய ஊரைத் தலைமையாகக்கொண்ட ஊர்களின் றொகுதியாகிய மிழலைக் கூற்றத்தையும், தொன் முதிர் வேளிரது, முத்தூறு என்றும் பெயரையுடைய ஊரைத் தலைமையாகக்கொண்ட ஊர்களின் றொகுதியாகிய முத்தூற்றுக் கூற்றத்தையும், இவன் ஓர் காலத்தில் கைக்கொண்டான். இவன் இங் ஙனம் கைக்கொண்டதை, "மாவேளெவ்வி .... மிழலையொடு ... . தொன்முதிர் வேளிர் ... . முத்தூறு தந்த" என்ற புறத்தடிகள் தெரிக்கும்; உச. கூற்றம், கூறுபாடு; நாட்டின் பிரிவு முற்காலத்தில் இப் பெயரால் வழங்கியது போலும்.

தொன்முதிர் வேளிர்—அகத்திய முனிவராற் கொண்டு வரப்பட்ட பழைய முதிர்ந்த வேளிரென்க. இவ்வரலாறு தொல்காப்பியப் பாயிரத் தெழுதிய நச்சினார்க்கினியார் வசனங்களாற் றெரியும். இவனோடு எதிர்த்த பகைவர் போர் செய்ய வல்லு நரல்லராயினும் பகைவரெனப் பெயர் பெற்றுச் சுவர்க்கத்தின் கண் வாழ்வோராவர்; எனவே, "புண்ணியம் புரிந்தோர் புகுவது துறக்க மென்னுமீ தருமறைப் பொருளே" என்பது நினைப்பிற்கு வருகிறது. ஆகவே, புறங் கொடா திறந்தோர் வீர

சொர்க்கம் பெறுவர் என்க. போந்தது, இவனோடெதிர்த் தவர் அங்ஙனமானாரென்பது. இதனாலும் இவன் வீரச் செயல் விளங்கிற்று. இவன், அறக்கள வேள்வியும், மறக்கள வேள்வியும் செய்ததோடு, புலவர்களிடத்து அன்பும், உத்தமகுணங்களுமுடையோன்.

இதுகாறுங் கூறியதனால், இவன், இளமையிலேயே வீரத்தையும், ஆழத்தையுமுடையவனென்பதூஉம், மதுரைக் காஞ்சிக்குத் தலைவனிலென்பதூஉம், சேரன் மாந்தரஞ் சேரலிரும் பொறையைச் சிறைப்படுத்திய தோடு, சேரன், செம்பியன் திதியன் முதலிய எழுவரை வென்றானென்பதூஉம், மிழலைக் கூற்றத்தையும், முத்தூற்றுக் கூற்றத்தையும் கைக்கொண்டானென்பதூஉம், செய்யுள் செய்தலில் வல்லவனென்பதூஉம், அறக்கள வேள்வியும், மறக்கள வேள்வியும் புரிந்தானென்பதூஉம், புலவரிடத் தன்பும், உத்தமகுணங்களு முடையோன் என்பதூஉம் பெறப்படுகின்றன. இவன் பெயர், பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் எனவும், நெடுஞ்செழியனெனவும் வழங்கும்.

★ பரத சாத்திரம். ★

இந் நூல் நாட்டியம் பழகுபவர்கட்கும், பழக்குபவர் கட்கும் இன்றியமையாத சிறந்த அரிய நூலாகும். 182 பக்கங்கள் கொண்டது. பாவ வியல், இராக வியல், தாள வியல், ஒழிபியல் என நான்கு இயல் களும் தெளிவுரையும், அடிக்குறிப்பும் உள்ளன.

விலை ரூ. 1—8—0

(அஞ்சற் செலவு வேறு.)

கன்றும் உதவும் கனி.

(ஔவை. துரைசாமி, மதுரை.)

கன்றும் கனி உதவும் என்ற தொடர், கனியுதவும் வாழைக் கன்றைக் குறிப்பது யாவரும் அறிந்ததொன்று. ஒரு வாழை மரம் தான் நிற்குமளவும் நின்று கனியாகிய பயனை யுதவியதும் இறந்துவிடும்; அப்போது அதனடியில் வேறொரு கன்று தோன்றிவிடும். தன் தாய் கனியுதவி இறந்ததென எண்ணி மடியாது தானும் தன் போலவே கனியுதவி மடியும். இதுபற்றியே "நின்று பயன் உதவிநில்லா அரம்பையின் கீழ்க் கன்றும் உதவும் கனி" என்று சான்றோர் நன்னெறி கண்டனர். இதனால், தந்தையின் அரிய இனிய செயல் ஒன்று மகனிடத்தும் தோன்றுமானால், "கன்றும் கனியுதவு மல்லவா?" என்ற தொடர் பிறிது மொழியும் அணியாக வழங்குவ துண்டாயிற்று. வேள் பாரியின் வள்ளன்மை அவன் மகளிரிடத்தும் இருந்தமையால், அவரது வரலாற்றை ஆராய்ந் தெழுதிய புலவர் திரு. க. உலகநாத பிள்ளை யவர்கள் அவ் வரலாற்று நூலுக்குக் "கன்றும் கனி யுதவும்" என்று பெயரிட்டார். இங்ஙனம் கன்று கனியுதவும் செயல் வாழை யினத்தில் இன்றும் நடைபெறுவது போல மக்களினத்திலும் பொய்யாமலே இருந்து வருகிறது. செல்வம் மிக்க தந்தை மேற்கொண்ட நற்செயலை மக்கள் மேற்கொண்டு செய்வதும், அவர்கட்குப் பின் அவர் தம் வழித் தோன்றல்கள் செய்வதுமாக வழி வழியாக நிலவுவதுண்டு. இதனைத் தமிழ் நாட்டுத் தனவணிகர் இனத்தில் இன்றும் காணலாம். இவ்வாறு வழி வழியாக வந்த செயற் பண்பால் இன்று தமிழகத்தில் சிவன் கோயில்கள் மிகப் பல சிறந்த திருப்பணி பெற்று அழகுற இருக்கின்றன. முன்பொரு நாள் திருவேடகம் சென்றிருந்தபோது, அக் கோயில் திருப்பணி குறித்துப் பேசிய பெரியவர் ஒருவர், சட்டென "அரம்பையின் கீழ்க் கன்றும் கனியுதவும்" அல்லவா? என்று சொல்லக் கேட்டதும், எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி யுண்டாயிற்று. வாழையினிடத்துவழி வழியாக வழங்கிவரும் நற்பண்பு செல்வ மக்களிடத்துச் சிறப்புற நிற்கக் காண்பதே இன்பம்; அதனை நன்மக்கள் எண்ணி மகிழ்ந்து எடுத்துரைக்கும் போது பேரின்பம் உண்டாகிறது.

இத்தகைய செயலொன்று சென்ற வாரத்தில் நடைபெற்றது. மதுரை மீனாட்சி மில் முதல்வர் கரு. முத்து. தியாகராசன் செட்டியார் தம்மை யடைபவர்க்கு வேண்டும் உதவி செய்யும் வள்ளன்மையுடைய ரென்பது தமிழறிந்தோர் அனைவரும் நன்கறிந்த செய்தி. தமிழ்ப் புலமை நிறைந்தோர்க்குப் பெரும் பொருள் உதவி இனிது வாழச் செய்வது பிறர் அறியா வகையில் நடைபெறும் அவரது தனித்த வண்மைச் செயல். உயர்கலாசாலைகளும், உயர்நிலைக் கல்லூரியும் நிறுவிக் கல்வியை நாட்டு மக்கட்கு வழங்குவது அவரது பொதுத் தொண்டு. "தமிழ் நாடு" என்னும் நாள் தாள் வாயிலாக நல்ல தமிழில் உலக நிகழ்ச்சிகளை நாடோறும் வெளியிடுவது ஒரு சிறப்புத் தமிழறமாகும். இதற்காக ஒரு வகை ஊதியமும் இன்றி இதுகாறும் இரண்டு லட்ச ரூபாய்க்குமேல் செலவாகியிருக்கிறது. தமிழ் வளர்ச்சி குறித்தும் தமிழ் மக்களின் உலகியல் அறிவு மிகுவது குறித்தும் உதவப்படும் இப் பெருவண்மை நாடோறும் நடந்த வண்ணம் இருக்கிறது. இவற்றைச் சீர்தூக்கிக் காணும் நல்லோர் கூட்டம், கரு. முத்து. தி. அவர்களைத் "தமிழ் வள்ளல்" என்று கூறிப் பாராட்டி வருகிறது.

இன்றைய தமிழறிஞர் உலகம் ஒருவர்பால் விளங்கும் நற்பண்புகளை மறைத்தாலும் மறைக்குமேயன்றி இல்லாத நற்பண்புகள் உள்ளன எனப் பொய்யாக ஏற்றிப் புனைந்துரைப்பதில் ஈடுபடுவதில்லை. இல்லது புனையும் இயல்பு இக்காலத்தில் இல்லையென்பது உண்மை. உள்ளதன் உண்மையை உள்ளபடி யெடுத்துரைத்து இன்புறும் இன்றைய அறிஞர் உலகம் கரு. முத்து. தி. அவர்களைத் "தமிழ் வள்ளல்" என்று பாராட்டுகிறது என்றால், வேறு கூறல் வேண்டா.

இத் தமிழ் வள்ளலுக்கு மக்கள் இருவர் உள்ளனர். இருவரும் தந்தையைப் போலவே தமிழார்வம் நிறைந்தவர்; தமிழறிஞர்களை நன்கு மதித்துச் சிறப்பிக்கும் நலம் வாய்ந்தவர். அவர்களில் முன்னவர் சுந்தரம் என்றும், இளையவர் மாணிக்கவாசகம் என்றும் பெயர் பூண்டவர். இவ் விருவர் பெயர்களே இவர் தந்தையான நம் தமிழ் வள்ளலின் சிவநெறிப் பற்றினைச் சிறப்புறக் காட்டுகின்றன. இது நிற்க,

திரு. சுந்தரம் அவர்கள் ஆங்கிலத்தில் நல்ல புலமையுடையர்; ஆங்கில மொழி வழங்கும் அமரிக்கா ஐரோப்பா

முதலிய நாடுகட்குச் சென்று அவ்வக் நாட்டு மக்கட் பண்பை நன்கு அறிந்தவர். எது செய்வதாயினும் அதனை நன்றாக ஆராய்ந்து குறித்த காலத்தில் முடிக்கும் குறிக்கோள் உடையவர். விரிந்த மனப் பண்பும் சிறந்த நோக்கமும் அவர் நெஞ்சில் நிலவுவதை அவரொடு சொல்லாடுந் தோறும் விளங்குவதை யாவரும் எளிதில் காணலாம்.

தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் நற்றிணையை உரையுடன் வெளியிட வேண்டுமென மேற்கொண்டபோது என்னை அதற்குரிய பணியினைச் செய்யுமாறு திரு. வ. சுப்பையா பிள்ளை யவர்கள் தெரிவித்தார்கள். தூத்துக்குடி வணிகர் திரு. E. K. சேதுராமலிங்கம் பிள்ளை யவர்களுடன் திருச் செந்தூர் சென்று செந்திலாண்டவன் திருமுன் வைத்து அப்பணியைத் தொடங்கினேன். சின்னாட்களுக் கெல்லாம் நற்றிணை மூல ஏடு ஒன்று கிடைத்தது. அதனை அண்ணாமலைப் பல்கலைக் கழக விரிவுரை யாளரான திரு. வெள்ளை வாரணம் அவருடன் ஆராய்ந்ததில் பல பாட வேறுபாடுகள் கிடைத்தன. முயன்றால் வேறு ஏடுகளும் பெறலாம் என்ற ஊக்கமும் உண்டாயிற்று. அதன் பின் மதுரையில் உள்ள மதுரைக் கல்லூரி மாணவர் ஒருவர் துணையால் போடிநாய்க்கனூர்க்கு அண்மையிலுள்ள டொம்மிச்சேரியில் நற்றினை யேடு ஒன்று கிடைத்தது. அதனால் ஆசிரியர் பெயர் காணப்படாத நற்றிணைப் பாட்டுக் கட்கு ஆசிரியர் பெயரும், சில பாட்டுகளில் விடுபட்டிருந்த அடிகளும் சொற்களும் சொற்றொடர்களும் கிடைத்தன. இந்நிகழ்ச்சியை உடனே "தமிழ் நாட்" டில் வெளியிட்டேன். செட்டி நாட்டுப் பகுதியில் மிதிலைப் பட்டியில் டாக்டர் திரு. உ. வே. சா. ஐயரவர்கட்குப் பழைய ஏடுகள் சில கிடைத்த செய்தி கேள்வியுற்று, அப் பகுதியில் எங்கேனும் ஏடுகள் கிடைக்குமோ என நண்பர் சிலரைக் கேட்டிருந்தேன். அவர்களில் தெக்கூர் விசாலாட்சி கலாசாலைத் தமிழாசிரியர் திரு. வித்துவான், கதி. சுந்தரமும் ஒருவர்.

சென்ற வெள்ளிக்கிழமை (10—4—53) யிரவு யான் "தமிழ் நாடு" அலுவலகத்தில் இருந்தேன். அப்போது திரு. தி. சுந்தரம் செட்டியார் அவர்கள் வந்து, "என்ன, அவ்வை, நாளைக்கு ஊருக்குப் போகலாம் வருகிறீர்களா?" என்றார். எனக்கிருந்த வேலையைக் காட்டி வர இயலாமையைத் தயக்கத்தோடு யான் மொழிந்தேன். "என்றைக்கும்

தான் வேலை இருக்கும்; வாருங்கள் தெக்கூர்க்குப் போய் வரலாம்" என்று மறுபடியும் கூறவே, யானும் மறுக்க மாட்டாமல் "வருகிறேன்" என்றேன். "நாளைக் காலை 6. 45 மணிக்குத் தயாராய் இருங்கள்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். சிறிது நேரத்திற் கெல்லாம் அங்கே திரு. மாணிக்கவாசகம் செட்டியார் வந்து சேர்ந்தார். அவரோடு பேசிக் கொண்டிருக்கையில் "நாமும் ஓலை யேடுகளைத் தொகுக்கவேண்டும்; அதற்கான முயற்சிகளைச் செய்வோம்" என்று தாமாகவே விரும்பிக் கூறினர். அவர் பேச்சில் எப்போதும் போலவுள்ள கிளர்ச்சியும் வேலைத் திட்டமும் மிக்கிருந்தன என்றாலும், "ஏடுகளைத் தேடித் தொகுப்போம்" என்றது மட்டில் புதுமையாக இருந்தது. நாளை நடப்பதை யாவர் அறிவார்?

மறுநாட் காலையில் குறித்த நேரம் கடந்து விலையுயர்ந்த மோட்டார்கார் ஒன்று என் வீடு நோக்கி வந்தது. அது திரு. தி. சு. அவர்கள் வழக்கமாக வரும் கார் அன்று; அவர் தம்பி திரு. தி. மா. வரும் காராகும். அது கண்டதும் என் மனதில் தோன்றிய திகைப்பு திரு. தி. சு. அவர்கள் குரலால் நீங்கிற்று. பிறகு தி. சு. அவர்கள் தான் வரும் கார் வர இயலாது போனதை யுரைத்து என் ஐயத்தை நீக்கினர்கள். பின்பு நாங்கள் இருவரும் காலை நேரத்தேயே தெக்கூர் சென்று சேர்ந்தோம்.

தெக்கூரில் திரு. கரு. முத்து. தி. அவர்களின் தமிழ்ப் பேரகம் ஒரு சிறந்த அமைப்புடன் விளங்குவது; கொடுங் கோடையை நெடு நல் வாடையாக மாற்றும் குளிர்ச்சி மாண்பும், மன மாசு நீக்கி அறிவுவொளி வீசும் தூய்மையும் தனிப் பண்பாகவுடையது. அங்கே நீராடி வழிபாடு முடித்துச் சிற்றுண்டி கொண்ட யான், சிறிது போதில் திரு. கதி. சுந்தரம் அவர்கள் வரக்கண்டேன். அவர் வலையப்பட்டிக்குச் செல்ல விருப்பதாகச் சொன்னர். திரு. தி. சு. அவர்கள் "நாமும் வலையப்பட்டிக்குப் போகலாமே" என்றார். எனக் கென்னவோ, தெக்கூர்ப் பேரகத்திலே தங்கி என்னோடு கொண்டு சென்ற குறை வேலையை முடிப்பதிலே கருத்து ஊன்றியிருந்தது. அப்போது, கதி. சுந்தரம் என்னை நோக்கி, "வலையப்பட்டிக்கருகில் புதுப்பட்டி யென்றோர் ஊர் உண்டு; அங்கே ஒரு வீட்டில் ஏடுகள் பல இருக்கின்றன; போய்ப் பார்க்கலாம்" என்றார். பின்பு நாங்கள் மூவரும்

வலையப்பட்டிக்குச் சென்றோம். வலையப்பட்டியில் ஒரு வீட்டில் திரு. தி. சு. அவர்கள் இருந்து கொண்டு, 'நீங்கள் காரைக்கொண்டு புதுப்பட்டிக்குப் போய்வாருங்கள்' என்றார்.

இப் பகுதியில்தான் முதலைப்பட்டி (மிதிலைப்பட்டி) உளது என்றபோது எனக்கு இங்கே பழைய ஏடுகள் கிடைக்கலாம் என்ற எண்ணமுண்டாயிற்று. சிறிது போதில் நாங்கள் சென்ற கார் ஒரு வீட்டின் வாயிலில் நின்றது. அதைக் கண்டதும் எப்படியோ என் உள்ளத்தில் இங்கே சில நல்ல ஏடுகள் கிடைக்கலாம் என்ற நம்பிக்கை உறுதியாயிற்று. யான் சென்ற காரைக் கண்டதுமே, அவ் வீட்டில் உள்ளவர்க்கு என்பால் நன்மதிப்பு உண்டாயிற்று. உள்ளே சென்ற கதி. சுந்தரம், வீட்டு ஆச்சிக்கு வந்த நோக்கத்தைத் தெரிவித்துவிட்டு என்னை உள்ளே அழைத்துச் சென்றார். அங்கே இருந்தோர் பலரும் என்னை அன்போடு வரவேற்றார்கள். நான் இருந்ததும், வீட்டு ஆச்சியார், ஒரு பெட்டி நிறைய இருந்த ஓலை யேடுகளை என்முன் கொண்டுவந்து வைத்து "இவைகளைச் செல்லரிக்காதபடி காத்து வருகிறோம்" என மிக உருக்கமாகச் சொன்னார்கள். ஏடுகளின் காட்சியும் ஆச்சியின் மொழியும் என் உள்ளத்தைச் சிறிது நேரம் அசைவின்றி நிறுத்தின.

பின்பு யான் ஏடுகளத்தையும் ஒன்று விடாமல் பார்க்கத் தலைப்பட்டேன். சிறியவும் பெரியவுமாகிய பலவற்றையும் பார்த்து வருகையில், ஏடொன்றின் சிதறிய முதலேட்டில் "சாறுகழி வழி நாள் சோறு நசையுறாது, வேறு புல முன்னிய விரகறி பொருந" என்று தொடங்கும் அடிகளைக் கண்டதும் இது பொருநராற்றுப்படை யென வுணர்ந்தேன்; அதன் உள்ளே சில ஏடுகளைத் தள்ளிப் பார்க்கையில் முருகாற்றுப்படையும் அதன்கண் இருப்பது தெரிந்தது. பிறிதோரேட்டின் தொடக்கத்தில் "வான் பெயனனைந்த புறத்த நோன்பியர்தை யூணிருக்கையிற் றேன்று நாடன்" என்ற அடிகள் காணப்பட்டன. அதன் இறுதியில் "இது நல்லேட்டினர்" என்பதும் எழுதப்பட்டிருந்தது. உடனே இது நற்றிணை யென்பது தெரிந்தேன்; என் உள்ளத்தில் உண்டான மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. இவற்றோடு என் நெஞ்சிலெழுந்த ஆசை நிற்கவில்லை. எல்லா ஏடுகளையும் பார்த்து விடுவதெனத் துணிந்தேன். விறலி விடுதூதன், மள்ளராயன்

மடல் முதலிய வேறு சில நூல்கள் கிடைத்தன. மணியும் $1\frac{1}{2}$ மணிக்கு மேலாயிற்று. பின்பு தனது மனைக்குச் சென்றிருந்த கதி. சுந்தரம் வந்தார் அவருடன் வீட்டாரது அன்பார்ந்த விடையும் ஏடுகளும் பெற்றுக்கொண்டு திரு. தி. சு. அவர்கள் இருந்த வீட்டுக்கு வந்தேன். அவர் முகம் பசியாலும் வெயிற் கடுமையாலும் வாடியிருந்தது. நண்பகற் போதில் நெடிது நேரம் கழிந்தது பற்றித் திரு. தி. சு. அவர்கள் வருத்தப்படுவரோ என்ற அச்சம் என் மனதில் தோன்றி, யான் கொண்ட மகிழ்ச்சியனைத்தையும் மாற்றியது. அதற்கு மாறாக ஏடுகள் கிடைத்தது பற்றி அவர் என்னிலும் மிக்க மகிழ்ச்சி கொண்டார்; "போகட்டும்; இன்று நாம் தமிழ்க்கு நல்ல தொண்டு செய்தோம்" என்றார். என் மன நிலையை யறிந்து அவர்கள் அன்போடு உரைத்த மொழிகள் எனக்கு ஊக்கத்தை யளித்தன. நாங்கள் வேறொரு வீட்டில் விருந்துண்டு, நெற்குப்பையில் களைப்பாறி மாலையில் தெக்கூர் வந்து சேர்ந்தோம். பின்னர், திரு. தி. சு. அவர்கள் தெக்கூர் கலாசாலையின் சார்பாக செய்யவேண்டிய அலுவல்களைச் செய்தாராக, யான் என் வேலைகளையும் செய்து முடித்தேன். இரவு 7 மணிக்குத் தெக்கூரிலிருந்து புறப்பட்டு 9 மணிக்குள் மதுரை வந்து சேர்ந்தோம்.

இதற்கிடையில், அன்று மாலை ஏடுகளைக் கண்டு, "நாம் இன்று தமிழ்க்கு நல்ல தொண்டு செய்தோம்" என்ற அவருடைய சொற்கள் அடிக்கடி என் காதில் ஒலித்துக் கொண்டேயிருந்தன. அன்றிரவு உறங்குகையில் ஒரு பழைய நினைவு நெஞ்சில் தோன்றிற்று. தமிழ் வள்ளல் திரு. கரு. முத்து. தி. அவர்கள் "தமிழ் நாடு" வெளியீடு பற்றி நிகழ்ந்த பேச்சிடையே திங்கள் தோறும் பதினையாயிரம் ரூபாய் தமிழ் நாட்டுக்காகச் செலவாவது, ஒரு பயன் கருதியல்ல; தமிழ்க்குச் செய்யும் தொண்டு என்று உரைத்தார்கள். அவர்கள் நெஞ்சில் நிலவும் தமிழ்த் தொண்டு என்னும் கருத்து, அவர் வழித் தோன்றலின் உள்ளத்திலும் தோன்றி நின்று பயன் படுவதை என் மனக்கண் இனிது எடுத்துக் காட்டிற்று. அரம்பையின் கீழ்க் கன்றும் உதவும் கனி" என்ற சான்றோது நல்லுரையின் சால்பு தான் என்னே! வாழ்க தமிழ் வள்ளல்.

செல்வக் குகன்.

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

III

இடம், கங்கைக் கரை. பொழுது : முற்பகல்

சீர்மிகு கழலில் கழல்தனை அணிந்து
பார்தாங்கு கரமதில் பற்றிய வில்லொடு
நாரம் மிக்குள்ள நற்கடல் போன்று
பார்நடுக்கங் கொள்ளும் படைகளைக் கூட்டி
நடையில் வருபவன் இராமரை நண்ணி
தொடர்ந்து வருபவன் தானோ! அலனோ!
அல்லாமல் அவனை அடியேன் தாக்க
வில்லாண்மை யற்று விளங்குவோன் யானோ!
வருகிற பரதனை வழிதாண்ட விடின்
இருபெருந் தோழ ரென்னவ ரியம்பிய
சொல்லை மறந்த சிறியனு னன்றோ?
அவனுடை நெடும்படை ஆழி நெடுந்திரை
இவனலாது எங்ஙனம் ஏறிடும் அக்கரை,
இப்படை தனை அவண் ஏகச் செயாவிடின்
இப்படி மக்கள் இகழாரோ என்றனை.
சிருங்கி பேரம் எனத்திரை கங்கை
மருங்கு தோன்று மாநகர் வாழ்க்கையன்.
கொற்றம் கொள்ளும் குகன் எனும்நாமம்
செற்றம் விளையாவிடின் சிதைவுற் றிடாதோ.
ஆயிரம் அம்பிக்கு நாயகன் நானே.
தூயகங்கைத் துறைவிடும் தொன்மை யான்
நாவாய் வோட்டும் நற்றொழில் உடையோன்
நானோ இவனது சேனைக்கு அஞ்சுவல்!
இராமரென் தாயினும் நல்லோ னுன
கோமகன் தனக்கு கொண்டொரு நாள்யீந்த
தேனும் மீனும் சீரிய தென்று
வானமிர் தமபோல் வழங்கிய திவற்றை
உண்ணுத போதினும் உவந்தன ரன்றோ!
அன்று கூறியசொல் என் செவியில்
இன்று கூறிய போலொலிக் கிறதிவணே!
இப்பாரி லிலங்கும் ஏந்தலுக் கடிமை
தப்பாது செய்ய தகவுடை எனதகம்.
ஒருப்பட்டிருக்கும் உண்மையை உணர்த்த
விருப்பு கொடன்பு மிளிர் கின்றதுவே.
எனதுயிருடலு மினித்திடு மவரைக்
கணந் தரியாது காப்பேன்! பரதனின்
துணிவுற்ற படையை தீங்குறு வண்ணம்
செய்யேனு லென்திறம் பாடென்னும்!

எனது யிரனையாய் என்றன் றெனக்கு
உனதிளை யானிவன் உற்றவிவ் விளங்கொடி
நினது சுற்றம் நீள்நிலன் முழுதும்
நின்னக மெனதுணர் என்றுநன் நேர்மையில்
புகன்ற புனிதன் போற்றிடும என்னெடு
அகன்ற புவியதில் ஐவராயினேம்
என்று ஊட்டிய உணர்ச்சி உணர்ந்திடேனே?
பொன்மொழித் தலைவன் புகன்ற வாசகத்தை
உன்னுங்காலே உற்ற இப்பரதன்
துன்னர் பகைமையில் தோன்றிடு வானே!
ராமன தன்முன்னேன் என்று நண்ணுதும்
வாம்புலி யனையான் வலியன் எண்ணுதெம்
எல்லைக்குள் இவ்வாறு இந்தப் பரதன்
ஒல்லையில் வருகிறுன். உறுவில்லை வளைத்து
மேகத்தினின்று மழைவரு மாறுபோல்
ஆகம் நிறைந்த அமபதை விடுத்தால்
என்னநேரு மென்பதை உணராது
துணிவொடு பரதன் தோன்றிடல் யாதோ?
நாடு கொடுத்த என் நாயகனுக்கு
நாடு கொடுக்க கடுத்திடலாமோ?
பரதன் படைவரும் பான்மையை நோக்கின்
தரணியோர் எல்லாம் தயங்கிடுவாரே!

* * * *

குணநல பரத! கொற்றவ! நின்னிலை
உணர்ந்தேனின் முகம்வெளிர் வுற்றதுவே!
நினதகம் துயரத்து நிலையுற்ற தென்ன
உயிரற்ற பாவையும் உனதுளக் கிடக்கையின்
பயிர்ச்சியைக் கண்டு பண்பொடு கனியும்.
அந்தோ! நீ தவம் அடைந்தோங்கியதால்
சுந்தரனைப் போல் துலங்கிடு கின்றுய்
எம்பெருமான் பின்பிறந்தோர் யார்க்கும்
துன்பம் வளர்க்கும துயரிழையாரே!
தாதை உதவிய தரணி யதனை
வேதை யெனவிட்டு வெங்கானகத்து
வந்த நாதனை மனமுவந் தழைக்க
அந்தமுடன் வந்த அழகிய தோளாய்!
மன்புகழ் பெருமை நும்மரபிற்கு
நின்ற வழித்துணையாய் நிலைபெறச் செய்தாய்!
பெரும்புகழ்க் கெட்டா புனிதனு மிளையனும்
அரும்பெரும் தெய்வ அழகுடைத் தொடியும்
அப்பெருந் தகையொடு ஆண்டகாய் காட்டுவல்,
இப்பெருந் தென்றிசை இன்புடன் வருதி.

திருவெம்பாவையின் கதிர்மணி விளக்கம்.

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

பற்றொழிவின் காரணமாக ஞானத்தால் இறையினை அடையுமுன், அன்பை உருக்கி இன்பச் சிவனை அடையும் நெறியினையும், இறை உயிரினை ஆட்கொண்டருளும் விளையாட்டின் இயல்பினையும் விளக்குவது திருவெம்பாவையாகும். திருவெம்பாவைப் பாடல்கள் இருபதும், பண்டிதமணியின் பேருரையால், கதிர் கண்ட மலர் போன்று நிறங்களை யுடையதாய் உரை விளக்கங் கொண்டு மலர்ச்சியெய்தி இன்பத்தேன் பொழியும் பொலிவு உடையன. இப் பாக்களை பண்டிதமணியார், சாத்திர நுட்பத்து உள்ளொருமையால், உயிர்த்தொகுதிகளுக்கு இறை உதவி புரியும் தீக்கை முறைகளின் இயல்பினை முற்றிலும் அனுபவித்து, கற்குந்தோறும் மொழிச் செவவி எதிர்ந்தினிக்க உரை வழங்கியதினுன், இவ் வுரை, இறை யுணர்வை இயற்கலை வளர்ச்சியுடன் தூண்ட வல்லதாய்த் திகழ்ந்து, அந்த கரணத்திற்கும் ஆன்மாவிற்கும் இன்பமாய நாத விருந்தாகும் இயல்பு கொண்டுள்ளதென உணர்ந்து வியத்தொறும், வியப்பிறந்தன்றே.

மணிவாசகர் தம் முள்ளத்தில் எழுந்து விளங்கும் சிவக்கனலை திருவெம்பாவையின் பாடல்தோறும் கண்டுணர்ந்த பண்டித மணியார், தம் உரை மூலம் மொழியறிவில் ஒளி யறிவு தேடும் கண்ணுதலை விளக்கும் முறை உரைக் கொணு மாட்சி யுடைத்தென்பது உணரப்படும். ஆழ்ந்தகன்ற நுண்ணியனைக் கண்டு கலந்து இன்புறும் வகையறியாத மறைகள் 'ஐயா' எனவோங்கி ஆர்வமுடன் ஆர்த்தும், முறையிட்டும் முடிவில் மனமடங்காதனவாய் மோனவுறக்க நிலையினை யெய்திட, பண்டிதமணியார், ஆகமமாகி நின்று அண்ணிப்பானது இயலை நுட்பமுற உணர்ந்து, தனக்கிணை தானேயான தன்தெளித்துரைத் திறனுல், அவனருளே கண்ணுகக் காணும் அருமையின் எளிமையினையும் விழுப்பொருளினையும் புகட்டும்

வகை, மிக்கதோர் விம்மிதம் பயப்பதால், வியந்து பாராட்டற்பாலது. இதனுன் இவரது உரையின் இனிமை, நினைவார் நினைதொறும் நிலைக்கு நிலை சுவை மிகுமாறு தேன் வடிவமாக நமது நாவிலூறித் தனது தன்மையினைக் காட்டுவதோடமையாது, பரன் அறிவையும் பரை அறிவையும் எளிதாக விளக்கி சிவக் கலப்பிற் கேதுவாகிய துரியத் துயிலில் உயிரினங்களை ஈடுபடச் செய்யும் பான்மையினையும் பெற்றுள்ளது. இருள்வழி நீக்கி பதிவழி துலக்கும் இவ் வருளுரையினைப் பற்றி நின்ருல் மதி மயக்கும் தீவினைகள் கூடாதழியுமென்க.

நாதாந்த முத்தியும் சித்தியும் நண்ணும் வகையில் கதிர்மணி விளக்க வுரைப் போக்கு செல்வதினுன், இறையருளை விளக்கும் தவ முயற்சியின் பாலெழுந்த இவ் வுரையினை உணர்ந்தும், அறிந்தும், தெளிந்தும் ஒழுகுவோர்க்கு, அவ் வறிவினில் அரன் வெளிப்படுவதும், துரிய வெளியில் உயிரொளி செப்பரிய சிவ வொளியில் ஒடுங்கிக் கலப்பதும் உறுதியாகும். மற்றும் பண்டித மணியார், திருவெம்பாவைக்குரிய சக்தியை வியக்கும் நுண்பொருளுணர்ச்சியினை எளிதில் விளங்கச் செய்யும் விழுமிய புலமைத் திறன், நூல் தேர்ய்ந்த இவரது சிந்தையின் பண்பும் பயனுமாய பகுத்தறிவு, கண்ணோட்ட மெனும் கழி பெரும் காரிகையோடு திகழ்ந்து சிவயோக சித்தியினைக் கூட்டி வைக்கும் வகையினைப் புலப்படுத்தும். உரையின் சொல்லழகோடு கூடிய பொருட் செறிவும் தெளிவும், பண்டித மணியாரது பாடறிந்தொழுகும் நேர்மையுளப்பண்பிற்கும், அருநடைக்கும், நுண்மாண் நுழை புலமைக்கும் எடுத்துக் காட்டாக நிற்பதோடல்லாது, வாழுமுயிர்களின் தற்போதத்தினைத் தவிர்த்து சிற்போதத்தினை உதிக்கச் செய்யும் செம்மை நலமும் திருவுமுடைய தென்பதைக் கண்டு மகிழற்பாலது.

குறளும் சிந்தும்.

வித்துவான் திரு. சி. கோவிந்தராசன், தலைமைத் தமிழாசிரியர்
உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி, கரந்தை.

இரண்டடியான் வருவது குறள்; மூன்றடியான் வருவது சிந்து. இதனையே யாப்பிலக்கணம் "குறளிரு சீரடி சிந்துமுச் சீரடி" எனக் கூறு நிற்கும். ஆயினும், ஈண்டு எடுத்துக் கொண்டது பாக்களைப் பற்றியன்று. முறையே இரண்டடி மூன்றடி அளவினராகக் கருதத் தக்க ஆண்பாலரைப் பற்றியே யாம். இவர்கள் உடலளவினை ஒத்தே குறளர் சிந்தர் எனப் பெயர் பெற்றன ரென்பது தெளிவு.

இத்தகைய குறளும் சிந்தும் பண்டை நாட்களில் அந்தப்புரக் காவலர்களாக அமைக்கப் பெற்றிருந்தனர். இதனை,

"ஆரந்துயல்வர அந்துகில் சோர்தர
வீரம் படக்கையை மெய்வழி வீசித்
தேரை நடப்பன போற்குறள் சிந்திேனா
டோரு நடந்தன வொண்டொடி முன்னே"

என வரும் சிந்தாமணிச் செய்யுள் விளக்குவதாக அமைந்துள்ளது. இக் கருத்தினை யொத்தே கம்ப நாடரும்

"வாமமேகலை யாரிடை வாலதி
பூமிதோய்பிடிச் சிந்தரும் போயினர்"

எனப் பாலகாண்டத்தின்கண் பகருவராயினர்,

மற்றுமிக் கருத்தினை மாண்புறச் சிறப்பித்தவர் துறைசை சிவஞான யோகீசப் பெருந்தகையராவர். இப்பெரியார் தந்துதவிய காஞ்சிபுராணத்தில், உமையம்மையார் புறப்பாட்டுப் பகுதியில், பிற மகளிர் புறப்படுங்கால் அவர்கட்கென்று அமைக்கப்பட்ட குறளும் சிந்தும் செல்லும் மரபினை யொட்டியே தமது நாயகரது படைகளாய குறளும் சிந்தும் (பூதகணங்கள்) சென்றன வென்னும் கருத்துடைய

"ஏதமில் சிறப்பினினையன பிறவும் உடன்செலச்
சிந்தொடு குறள்கள்
காதலின் முன்னே கையிணைவீசிக் கதுமெனக்
குறுகுறுநடப்ப"

எனும் பாவினை உரைப்பாராயினர்.

மற்றும்! குறளும் சிந்துமேயன்றிக் கூனும் அத்தொழிற் குரியராயமைக்கப் பெற்றிருந்தனரென்பதை

"சிந்தொடு குறளும் கூனும் சிலதியர் குழாமும் தெற்றி
வந்தடி வணங்கிப் போற்ற மணியணி விதானநீழல்
இந்துவின் கொழுந்துவிண் மீனினத்தொடும் வருவதென்ன
நந்தமில் விளக்கமன்ன நங்கையும் நடக்கலுற்றாள்"

என்னும் கம்ப இராமாயணப் பாடல் வலியுறுத்துவதா யமைந்துள்ளது.

மேற்கூறிய வற்றால் பண்டையரசர் "ஆடவரணுகா அருங்கடி வரைப்பு" என்று அழைக்கப் பெற்ற அந்தப்புரங்கட்கு, தீரக்குறியராய குறளரையும் அவரினும் சற்றே நெடியராய சித்தரையும் காவலராக அமைத்திருந்தனரென்பது புலனாகின்றது.

நீத்தல் விண்ணப்பம்.

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

(முற்றொடர்ச்சி : துணர் உக—மலர் க—பக்கம் 32.)

யான் எனது என்று யாதுமின்றி அறுதலுக்கு இறைவனை இடையறாது முறையிடும் மணிவாசகர், இறைவன், வித்தக வேடங்காட்டி தனக்குள் கருணையினாற் கலந்துகொள்ள, பிந்து கலைவழி தன்னுடலகத்தே தங்குவதற்கு இடுதிகொண்டு, பின் கரந்ததினைப் பெரிதும் ஆற்றாது பின் வருமாறு நெக்குருகி முறையிடலானார்.

'எம்பிரானே! கடையவனாகிய யான் நின்னை அறியும் அறிவறியாதும், ஞானசாதனையினைப் பெறும் விழுநெறியறியாதும் தளர்ந்தேன்! என்னை நின்வயப்படுத்தித் தாங்கிக்கொள்! யானோ நினது நுட்பமாகிய ஞானத் தொண்டில் ஈடுபட்டுள்ளவன். அதனான் என்னுளே வடகிழக்கு இக்கிலிருந்து அருவமாகிய இறை, உடலமாகிய வீட்டை வித்தாகிய பிந்து கலையால், உருவமாய் காட்டிய மேன்மையினை ஒரு சிறிது உணரப் பெற்றேன்! ஆகையான், நினக்கு யான் புறம்பானவனல்லேன்! மகளிரது சிற்றின்பத்தில் சிக்குமாறு முள்ள உடலை யான் உடையவனாயிருந்தும், வஞ்சகனாகிய என்னைக்கண்டு விடுதிகொண்டு பற்றொழிவினால் ஓய்வுற்றிருக்கும்படி ஆட்கொண்டது யாது காரணமென்பது அறியேனே! என்னுயிரில் கருணைவான்தேன் கலக்கவைத்து, என்னுடலையும் அருட்கலையோடு விரவும் அமுதத் தன்மையையுடையதாக்கி என்னை வளர்ப்பவனே! நின் கருணைக் கரத்தால் என்னை வளைத்து ஈர்க்கவும், என் இருதய குகையிலுள்ள மாசு நீங்க, அதன் கண்ணுள்ள செல்வம் புலனாய பின்பு, நின் அருட்கலையினை யுணர்ந்து மிளிர்கின்ற என்னை இடமாக்கிக் கொண்டனையே! அப்படியிருந்தும் ஞானவழித்தாய் நின்னருளாரமுதத்தை எனது உடலகத்தே யடைய மனச் சுழற்சியுற்றேன்! அறியாமையால் மறுத்தேன்! புன்மை தீர்த்து, ஒறுத்து அழித்து என்னை ஆண்டு கொள்! யான் பிழைத்தாற் பெரியோர் பொறுக்க வேண்டாவோ!

சிறியேனுகிய என் பிறப்பிற்குரிய அச்சத்தைத் தரும் அஞ் ஞான தத்துவங்களையும் மூலமும்மலங்களையும் ஒழிக்கும் சிவனே! பொறிகள் ஓரைந்தும், யான் பொய்யுலக வாழ்க்கை யில் படியுங்காலை, ஞானத் தொண்டில் ஈடுபடும்படி ஈர்ப்ப, மற்றும் ஞானத்தொண்டினை, யான் இயற்றுங்காலையிலும் அப் பொறிகள் உலக வியலில் வயப்பட இழுக்க, அதனுன் அலைப் புறும் வினையேன் நின் திருவடிகளைக் கண்டு கலக்க ஆர்வமும் அச்சமுங் கொண்டு வியர்வையுடையவ னுகின்றேன்! என் பிழையினை தீர்க்கின்றவாறு யாது? நீன் சீரருள் இன்னது கொல்லென விடையளிப்பார் யார் இங்கு? இருதலை கொள்ளிக் குள் அகப்பட்டு விழிக்கும் எறும்பை யொத்து, நின்னையே பிரிந்து உய்யும் நெறிவகை யறியாது, உலக வாழ்விலும் ஞான வாழ்விலும் அலைப்புண்டு முன்னர் திகைத்த என்னை இதுபோது இடமாக்கிக் கொண்டனையே! மற்றும் நின்பொலிகின்ற திரு வடிகளையே புகலெனப் பெற்றும் பிறவிப்பயனை எய்தாது வேதனைப்படுகின்றேன்! அதா அன்று, நின் திருவடிகளைக் கொண்டு ஞான நெறிகளினை இயற்றுதும் வேறுபட்டேன்! அப்படி யிருந்தும், வினைகளையுடையனுகிய என்னகத்தே நீ கலக்கும் வரையில், நின் பொன்மேனி, அருள் நீற்ருல் மறை பட்டே, ஒளியினை ககாட்ட வகைசெய்த நெடுந்தகையே!

இவ்வணம் என்னை ஆட்கொள்ள, உன்னைக் கலப்பவர் களாய ஞானிகள் நின்னை அடையும் முறையும் நெறியும் எளி தன்றென அச்சுறுத்த அதனுன் தளர்ச்சி மேம்பட்டு அந் நெறி யினை விடும் தகையேனை இடமாக்கியும் கொண்டனையே! அவ் வாறிருந்தும் நின்கருணைக் கடலுக்குள் உள்ளத்தினை அழுந்தச் செய்யும் வகையறியாச் சிறியேன் யான்! நினது திருவருள் வெள்ளத்தினுளே, உணர்வொடுங்கிப் படிந்து செயலொன்று மின்றி பேசற்கரிய நிலையின்கண், உன்னருளையான் பெற்றும் துன்பத்தினின்று முற்றும் மீளும் வகையினை எனக்குணர்த்தி மாறிலா மகிழ்ச்சியினை அருளுவாயாக! இவ்வாறிருந்தும், களி வந்த சிந்தையுடன் நின் கழலிணைக்கண்டு நின்னுடன் இரண் டறக் கலந்து அருளைப்பெற வகையறியாத அடியேனை 'அப்பா! அஞ்சல்!' என்பாரற்று, யான் எங்கும் அலைந்து சோர்ந்தேன்! என்பால் யாதொரு ஆற்றலு மிலாதிருப்பினும், கூற்றுவனுக்கு

விருந்தாக இருக்கும் எனது உடலை இடமாக்கிக்கொண்டாய்! அவ்வண்ணமே யிருந்து என்னோடுடன்வந்த அஞ்ஞான தத்துவங்களைக் களைந்து என்னை கருணையாற் கலந்து ஆண்டுகொள்! விற்றுக்கொள்! அல்லால் ஒற்றிவைத்துக்கொள்!

புழுக்கூட்டை யுடையனாகிய என்னுள், சக்திக்கனலாகிய குண்டலியின் ஓட்டத்தால் பிரணவம் உதயமாகும் யானைமுக உருநுழையச் செய்ய இயலாததால், யான் சோர்கின்றேன்! எனக்கு நலஞ்செய்யவேண்டி, நீயே ஞானவிக்கினத்தை நீக்கவும், ஓங்காரத்தைத் தெளிவாக ஒலிக்கச்செய்யவும், மலை போன்று நிற்கும் யானைமுகனை மூடியிருக்கும் இருளாகிய கருநிறமுள்ள தோலை நீ உரிக்க, யான் சூர்கொண்டிருந்தேன்! எனவே கொழுகொம்பில்லாத கொடிபோல் அலமலுற்றும், ஐம் புலனாலும் அலைப்புண்டும் வெதும்புகின்றேனை விடுதி காண்! நாதமாய தேனையும் பிந்துவாய பாலையும், நாத பிந்து கூட்டுறவாலாயதாய கன்னலையும், சந்திர கலைகளால் வெளிப்படும் அமுதத்தினையும் என் மனத்தோடு கூட்டி எனதூனையும் என்பினையும் உருக்கி அவைகளிலிருந்து தோன்றும் கலைகளாற் ஒளியையுடைய ஒண்மையனே! மெய்யடியார்கட்கு என்றும் அண்மையனே! நீ இதுபோது என்னைக் கைவிடில், ஆ! கெடுவேன்! என்னெனில் என் ஞான வாழ்க்கைக் குரித்தாய முதற்பொருளைச் சாருதற்குரிய முதற்படியினை யடைந்து அடியேன் மிகத் தேறிநின்றுளேன்!

எறும்புகள் நெய்க்குடத்தை மொய்த்துத் தடை செய்தல் போன்று, ஐம்பொறி சக்திகளும் பிரணவத்தைச் சுற்றி தடை செய்வனவாயிருக்கின்றனவே! மற்றும் யானைமுகன் பிரணவத்தைத் தன் வயப்படுத்திக்கொண்டு தன்னுருவத்தை இருள்மயமாகிய கரிய தோலினால் போர்த்துக் கொண்டிருக்கின்றனன், இருளை நீக்கிய வழி, யானை முகனது பெரிய துதிக்கையிலுள்ள கனல் மேலெழும்பி பிரணவத்தை ஒளியுறச் செய்யுமாதலானும் இதுபோது அச்சமின்றி யான் என்னுள் உறங்கும் சக்திக்கனலை மேலேற்றுவதில் தேறி நின்றேனாதலான், நின்னருட் சிவவொளியால் அவ்விருள் முதலாகிய மும்மலங்களை முழுவதும் போக்க, நின்னருட்டுணை ஒழிவின்றி எதுபோதும் வேண்டப்படும்! அது

போது நலனுற்ற புலனால் அழிவின்றியோகு முறையால் கூற்றை யுதைக்கும் திருவடி மலர்களையான் அடைந்து உணரின் அஃதே இமையா நாட்டவர் பெறும் பதமாகும்மே!

பிரணவ நிவப்பிலும் இதயத்திலும் இன்னமுதமான அவ் விரு திருவடிகள் மாறிமாறி மிதித்து ஆடுவதுபோன்ற உணர்வு எனக்கு உண்டாய வழி, சிறு தோணிபோல் நிற்கும் பிரண வத்தின் இடைப் பகுதியிலுள்ள இதய மடுவுக் குள்ளிருந்து வெள்ளைக்குரு நீராய கங்கை பொங்கிவழியும். அத்தகைய அமுத நீர்ப்பெருக்கினில் உடல் தூய்மையுற்று ஆன்மவொளி மிளிர யான் இன்புற்று, என்றும் வாழ அறியாது இவ்வுலகில் நீரற்றவிடத்து துடித்துக் கிடக்கும் சிறு மீனாகிய யான், நின் பிரிவில் அஞ்சி வெரு நீர்மையனானேன்.! பிரணவ நிவப்பில் சிவகலை இணைந்து நிற்பதினாலே என்றும் ஒளிமிகும் கொழுமணி யைக் குறியாகச் சார்ந்துள்ளார், ஞான நெறிகளைப்பற்றி இயற் றுங்காலை அன்பு நடுக்கங் கொண்டு கண்ணீர் ஆறாகப் பெருகும் நிலையினை யானுணர அன்னவர்பால் என்னைத் தூய்மைப் படுத்த பிணித்து ஆட்கொண்ட அருளினை அறிந்த எனக்கு ஞான வியல்பு தெளிய, எனது ஐம்பொறி சக்திகளுக்கு நின் கழலினை மேன்மேலுங் காட்டுவாய்!

விண்ணகமும் மண்ணகமும் நண்ணி நிறைந்து கலந்த ஐம் பூதங்களும் என்னுளே கலக்குற, அதனால் என் கண்ணீர் கடலெனப் பெருக, நின்னருள்வழி அதன் கண்ணுள்ள இரு ளாகிய நஞ்சினை சிவவொளியால் அமுதமாக்கிய பின்பே நிருண் மடிந்ததால் யான் துலங்குகின்றேன்! சிவவொளியால் துணங்கு அறல் அகன்றதினால், மலங்கள் ஐந்தும் சுழலும்படி உடலை ஐவேறு வகையான் வேறுபடுத்தி முக்குற்றங்களையும களைந் தாய்! தயிரின்கண் மத்தினையிட்டுக் கடைய, அதனின்றும் வெண்ணெய் வெளிப்படுவது போன்று, சிவக்கனல், கதுவுற புலன்களைக் கலக்க, தனி முத்திக்கொரு வித்தாகிய பிந்துவின் கலை மேலெழும் புவதினால், அதன்வழி சிவன் புலனாகும் நெறி யினை எனக்கு வகைப்படுத்திக் காட்டினாய்! என்னைத் தடுத் தாட் கொளற்கு, குண்டலி சக்திக் கனலிலிருந்து ஒளியை யுண்டாக்கி, வலியுள்ள இருளினிற் கப்பால் நிற்பவனே!

(தொடரும்.)

எங்கள் குலம்.

(இது ஸ்ரீ குமர குருபரர் அருளிய
"மீனாட்சி அம்மை குறம்" என்பதின் கருத்து)

இயற்றியவர்,
வித்துவான் த. பொ தண்டபாணி, பி. ஏ., அவர்கள்,
தலைவர், ஸ்ரீ செயராசன் பள்ளிக்கூடம்,
1. காமாட்சி அம்மன் கோவில் தெரு, புதுவை.

"மதுரை மீனாட்சி அம்மை குறம்" என்ற தலைப் பின்கீழ் அடிகள் குமரகுருபரர் கூறுகின்ற உயர்ந்த கருத் துக்களை எல்லாம், இறைவன் திருவருள் கூட்ட, ஒருவாறு திரட்டி அவற்றை எனது வணக்கமுற்ற எண்ணங்களோடு கலந்து இங்கே தந்துளேன்.

"எங்கள் குலம்" என்று இக் கட்டுரைக்குத் தலைப்புக் கொடுத்தேன். ஏன் என்றால் குறத்தியர்கள் அளவிறந்த புண்ணியஞ் செய்தவர்கள். எப்படி? அவர்கள் குலத் துதித்த வள்ளி நாயகியைத்தான் நாம் போற்றும் முருக வேள் அடி பணிந்து மணந்துகொள்ள நேர்ந்தது. இக் கருத்தினை அருணகிரியார் கந்தரனுபூதியில் "பணியாய் என வள்ளிபதம் பணியும்; தணியா அதிமோக தயா பரனே" என்று கூறிப் போந்துளார்.

அப் பிரணவப் பெருந்தகையே எங்கள் குலத் தெய்வ மாதலினாலும், அடிகள் குமரகுருபரரும் குறத்திமார்களின் செயல்களையே சிறப்பித்துக் கூறுகின்றாராதலினாலும், அவற்றிற்கிணங்கவே இக் கட்டுரைக்கும் அத்தலைப்பு ஈந்தேன்.

எங்கள் குலம்.

நீர்வளம் நிலவளம் நிறையப்பெற்றது மதுரை. அங்கே நல்ல பூஞ்சோலைகள் மிகப்பலவாய் உள்ளன. பூக்கள் நறு மணத்தை அள்ளி எறிகின்றன. அப்போது தென்றல் வீசுகிறது. மணங் கலந்த காற்ருகி மதுரை எங்கும் பரவு கிறது. மக்கள் சுவாசித்து மகிழ்கின்றனர். அத்துடன் கோடையின் வெப்பம் படாதிருக்க இயற்கையாகவே மேகங் கள் நாற்புறமுஞ் சூழ்ந்துள. மக்கள் அனைவரும் இன்பக் குரலோசை எழுப்பியவண்ணம் செந்தமிழ்ப் பாடல்கள் பாடுகின்றனர். உடைக்கும் உணவுக்கும் தங்குவதற்கும் வேண் டிய யாவும் அதிகமாகக்கிடைத்தால் யார்தான் கவல்வர்? மதுரைக்கு மேற்கில் பொதியமலை இருக்கிறது. அது பேர் போன மலை. பழமையும் பெருமையும் நிறைந்தது. பனியும் குளிரும் உடையது. வனப்பும் வளமும் நிறைந்தது. அருவிகள் நிறைய இறங்குகின்றன. பொன்னையும் முத்தையும் அரித் தரித்துத் தள்ளுகின்றன. அத்தகைய பொதியமலையின்கண் தான் குறத்திமக்கள் வாழ்கின்றனர். அவ்வருவிகள் யாவும் பெரும்பாலும் மதுரைக்கே பாய்கின்றன. வயல்கள் யாவும் பெருத்த விளைவைத் தருகின்றன. செந்நெல்லும் கரும்பும் அதிகம் பயிரிடப் படுகின்றன. மக்கள் வறுமை அறியார்.

மடுக்களில் வசிக்கும் மீன்கள் பல. அவற்றுள் சென்டுஞ் சேலும் சிறந்தன. மதுரையில் நிறைய அம்மீன்கள் கிடைக் கின்றன. இது உண்மை.

பாண்டி மன்னர்களின் தலைநகரம் மதுரை. அவர்களின் மொழி தமிழ். அம் மொழியினை நன்ருகக் காத்தனர். இறை வனே பற்பல நேரங்களில் முதலிடை கடைச் சங்கங்கள் நிலவியபோது மனித உருவோடு வந்து அக் கழகங்களை ஓம்பினுன் என்பது தமிழறிந்தோர்கள் யாவரும் மறுத்தற் காற்ருத உண்மை.

தமிழ் மொழி மிக மிக இனிமை உடையது. கற்புடைய மனைவிக்குக் கட்டுப்பாடாகக் கணவன் இருத்தலைப் போல, தமிழின் தொன்மைக்கும் பெருமைக்கும் ஈடாக அதன் இலக்கணம் இருந்து வருகிறது.

எனவே அவ்வினிய தமிழை ஓம்பிய நாடுதான் மதுரை. அவ்வினிமையைப் பருகி மிகவும் பெருமிதமாக வாழ்ந்த தெய்வப் பெண்களுள் தலை சிறந்தவள் மீனாட்சி அம்மையாகும்.

அவர்களின் வாயிதழ்கள் எந்நேரமும் துவருடைத்தாக இருக்கும். ஈரமும் அன்பும் உடையவர்கள் உள்ளமானது எப்போதும் நெகிழ்ந்த வண்ணந்தான் இருக்கும். அவ்வாறே அம்மையின் வாயிதழ்கள்கூட தமிழினிமை நீரால் நனைக்கப்பட்டு எப்போதும் துவர்ப்புண்டு கிடந்தன போலும்! அப்படிப்பட்ட அம்மையாரின் திருவடிகளை நினைந்துருகி நைந்தவண்ணம் இருந்தார் ஓர் பெரியார். அவர் பெயர் அகத்தியர். அவர் பொதியமலையில் வாழ்ந்தார். அங்கே நல்ல நறுமலர்கள் கிடைக்கும் அவற்றை அவர் பறிப்பார். அம்மையை மனதளவாக நினைத்து அர்ச்சிப்பார். வணங்குவார். அவ்வளவு புண்ணியம் நிறைந்த பொதியமலைதான் குறத்திமார்களின் உறைவிடமென்க.

பெண்களுக்குப் பொதுவாகவே நல்ல வாசனைப் பொருள்களிலும் நகைகளிலும் விருப்பமதிகம். அதிலும் இளம் பெண்களுக்குத் தங்கள் தேகத்துற்ற முக்கிய உறுப்புகளை நறுமணங் கமழும் வாசனைப் பொருள்களால் பூசி வீசிக் கொள்ளுதலில் அதிமிக ஆசை. செல்வ நிலைக்கேற்ப, அவ் வசதிகளைச் செய்து கொள்வர். தங்கள் மெல்லிய இளமையான தனங்களில் குங்குமக் குழம்பைப் பன்னீர் கலந்து பூசிக்கொள்வர். தங்கள் கைகளையும் சிவக்கச் செய்து கொள்வர். இது எங் நாட்டுப் பெண்களுக்கும் இயல்பு. மதுரை மீனாட்சி அம்மையும் இவ்வாறுதான்

செய்து வந்தனர். அஃதோடு அவர்கள் உலக முழுமுதற் பிராட்டியாராதலின் வேதங்களையும் ஆகமங்கங்களையும் அமைத்தின்புற்றனர். தாமரைமீது வசித்தனர். கழலில் ஒலிக்கும் மோதிரமணிந்தனர். ஈசன் கயிலாசர் மதுரேசர் என அழைக்கப்படும் சொக்கலிங்க சுவாமிகட்கே காதல் நிரம்பியவர். வஞ்சி, அபரஞ்சியைப் போலக் கொஞ்சுவர் நல்ல அழகிய பெண்மயிலோடுந் திரிகின்ற ஆண்மயிலைப் போல் நடிப்பர். இன்னிசை நிறைய அளிக்கவல்ல பூங் குயில் போலும் பாடுவர். அவ் வன்னையை வாழ்த்துந் தொழிலைச்சிரமேற் கொண்டவர்களே குறத்திமார்களாவர்.

அக் குறத்திமார்களின் தொழில்தான் என்ன? குறி சொல்வது. இத் தொழில் நம் பரதகண்டத்து மிகப் பழைய காலத்திலிருந்தே பெண்களாலேயே நடத்தப்பட்டு வந்திருக்கிறது.

குறி சொல்வதற்குமுன் நிகழும் செயல்களைப் கவனிப் போம்.

தக்கதோர் இடத்தைப் பெருக்கித் தள்ளிச் சுத்தஞ் செய்வர். புழுகுஞ் சந்தனமுங் கலந்த குழம்பைக் கொண்டு நல்ல பட்டுத் துணியில் அவ்விடத்தை மெழுகுவர். கோல மிடுவர். பிள்ளையார் உருவத்தைப் பசு 3 சாணத்தால் அமைப்பர். படியரிசி அல்லது நெல் கொணர்வர். அவ் விடத்தின்மீது பரப்புவார்கள் தங்கள் கைகளால் பரப்பும் போது விரல்களில் உள்ள மோதிரத்தைக் கண்டு மகிழ்வர். அதனைக் கண்டு மீனாட்சி அம்மையும் அவர்களுக்கு அருள் புரிவர். அப்போது சோமசுந்தரக் கடவுளும் அம்மையை அணைவதுபோல ஏனைய குறத்திமார்களைத் தனித்தனியே அணைந்துமகிழ்வர். அத்தகையோர்களே குறத்திமார்கள் என்க.

(தொடரும்.)